83. எண்ணளவு 1·25 கொண்ட பொருளருகு உருப்பெருக்கி கொண்ட நுண்ணோக்கியில், ஒளி 530 nm நீளம் கொண்டதை பயன்படுத்தினால் அதன் பகுப்பு எல்லை என்னவாக இருக்கும் ?

A) 265 nm B) 424 nm

C) 212 nm D) 0·4 nm.

Calculate the theoretical resolving power of the Microscope which has an oil immersion objective with a NA of 1·25 aided with an illumination of 530 nm.

A) 265 nm B) 424 nm

C) 212 nm D) 0·4 nm.

84. பட்டியல் **I** ஐ பட்டியல் **II** உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

பட்டியல் **I**		பட்டியல் **II**
a)	2 குரோமோசோம்கள்	1. செக் மற்றும் ஆல்ட்மேன்
b)	மிகப்பெரிய பாக்டீரியம்	2. *விப்ரியோ கோலரே*
c)	HIV	3. *தயோமார்கரிட்டா நமீபியன்சிஸ்*
d)	கிரியா ஊக்கி ஆர்என்ஏ	4. கேலோ மற்றும் மான்டேக்னர்.

குறியீடுகள் :

	a	***b***	***c***	***d***
A)	1	2	3	4
B)	4	3	2	1
C)	2	3	1	4
D)	2	3	4	1.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I		**List II**
a)	2 Chromosomes	1.	Cech and Altman
b)	The largest known bacterium	2.	*Vibrio cholerae*
c)	Human Immuno deficiency virus	3.	*Thiomargarita namibiensis*
d)	Catalytic RNA	4.	Gallo and Montagnier

Codes :

	a	***b***	***c***	***d***
A)	1	2	3	4
B)	4	3	2	1
C)	2	3	1	4
D)	2	3	4	1

85. கீமோலித்தோட்ரோப்ஸ் வகை பாக்டீரியாக்கள், இதைப் பயன்படுத்துகின்றன.

A) கனிமப் பொருட்களை சக்திக்காக பயன்படுத்துப்படுகின்றன

B) ஒளியை சக்திக்காக பயன்படுத்துகின்றன

C) கரிமப் பொருட்களை எலக்ட்ரான்களுக்காக பயன்படுத்துகின்றன

D) எண்ணெயை கரிமப் பொருளாகப் பயன்படுத்துகின்றன.

Chemolithotrophs are those bacteria which can utilize ?

A) Inorganic materials as energy source

B) Light as energy source

C) Organic compounds as electron source

D) Oil as carbon source.

86. மற்ற புரோகேரியாட்டுகளிடமிருந்து, மைக்கோபிளாஸ்மாக்கள் வேறுபட்டுள்ளதற்குக் காரணம்

A) செல் சுவரில் கைட்டின் உள்ளது
B) செல் சுவரில் மியூரின் உள்ளது
C) செல் சுவரில் புரதம் உள்ளது
D) செல் சுவரே இல்லை.

Mycoplasmas are different from other prokaryotes by

A) the presence of chitin in cell walls
B) the presence of nurein in cell walls
C) The presence of protein in cell walls
D) the absence of cell wall.

87. பார்வோ வைரஸ்களும் ϕ × 174 வைரசும் DNA கொண்ட வைரஸ்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். எனினும் பார்வோ வைரஸ்கள் ϕ × 174 வைரசிலிருந்து மாறுபட்டிருப்பது இதைப் பெற்றிருப்பதால்

A) குச்சி வடிவ ஈரிழை DNA
B) குச்சி வடிவ ஒரிழை DNA
C) வட்ட வடிவ ஒரிழை DNA
D) வட்ட வடிவ ஈரிழை DNA.

Parvoviruses and ϕ × 174 are examples for DNA viruses. Parvoviruses differ from ϕ × 174 by having

A) linear *ds* DNA
B) linear *ss* DNA
C) circular *ss* DNA
D) circular *ds* DNA.

88. உயிரினங்களை, 2 எம்பயர், 8 கிங்டம்களாகப் பிரித்தவர் யார் ?

A) கார்ல் வூஸ்
B) விட்டேகர்
C) கவாலியர்-ஸ்மித்
D) சோகின்.

Who proposed the 2 empire, 8 kingdoms classification of living organisms ?

A) Carl Woese
B) Whittaker
C) Cavalier-Smith
D) Sogin.

89. பெர்ஜிஸ் மேனுவல் ஆஃப் சிஸ்டமேடிக் பாக்டீரியாலஜின் இரண்டாம் பதிப்பு, முதல் பதிப்பைவிட மரபு வழி வரிசைப்படுத்தலைக் கொண்டுள்ளது என்பதற்குக் காரணம் அதில் பின்பற்றியுள்ள இந்த விவரங்கள் ஆகும்.

A) rRNA மரபணு வரிசைப்படுத்தல் B) DNA மரபணு வரிசைப்படுத்தல்

C) புரதம் மரபணு வரிசைப்படுத்தல் D) இவை அனைத்தும்.

The second edition of Bergey's Manual of Systematic Bacteriology is more phylogenetic than the first edition because it depends on informations on

A) rRNA sequences B) DNA sequences

C) Protein sequences D) All of these.

90. கீழ்க்காணும் கூற்றுகளை கவனத்தில் கொள்க :

I. டிக்கா நோய் மூன்று பூஞ்சைகளால் தோற்றுவிக்கப்படுகிறது.

II. கரும்பில் தண்டுப் பகுதியில் தோன்றும் சிவப்பு அழுகல் நோய். முதலில் ஓர் நார்ப்பூச்சியின் செயலாலும் அதைத் தொடர்ந்த ஒரு பூஞ்சையினாலும் ஆகும்.

மேற்கண்டவற்றுள் எது / எவை உண்மையானது ?

A) I மற்றும் II B) I மட்டும்

C) II மட்டும் D) I மற்றும் II உண்மையல்ல.

Consider the following statements :

I. The tikka disease is caused by 3 different fungi.

II. Stem infection during red rot of sugarcane occurs due to the action of nematode followed by the fungus.

Which among the above statements is / are true ?

A) I and II B) I only

C) II only D) I and II are not true.

91. நோய்க்கிருமிகள் தங்கள் விருந்தோம்பிக்குள் நுழைய பல இயற்கைத் துளைகளையும் காயத்தையும் பயன்படுத்துகின்றன. சில உதாரணங்கள் கீழே உள்ளன.

I.	*பக்சீனியா கிராமினிஸ்*	—	இலைத் துளை
II.	*பெனிசிலியம் எக்ஸ்பேன்சம்*	—	ஹைடதோட்ஸ்
III.	*எர்வினியா அமைலோவோரா*	—	நெக்டர்தோட்ஸ்
IV.	*சேந்தோமோனஸ் கேம்பஸ்ட்ரிஸ்*	—	லென்டிசெல்ஸ்.

இவற்றுள் எவை சரியான இணை இல்லை ?

A) I மற்றும் II B) III மற்றும் IV

C) I மற்றும் III D) II மற்றும் IV.

Pathogens enter the hosts by penetrating through various natural openings and wounds. Here are some examples.

I.	Puccinia graminis	—	Stomata
II.	Penicillium expansum	—	Hydathodes
III.	Ervinia amylovora	—	Nectarthodes
IV.	Xanthomonas compestiris	—	Lenticells

Identify the wrong matches :

A) I and II B) III and IV

C) I and III D) II and IV.

92. கீழ்வரும் இணைகளைக் கவனத்தில் கொண்டு உண்மை அல்லாத இணை(களை)க் குறியீடுகள் மூலம் தேர்வு செய்க.

I.	கரும்பில் சாட்டை ஸ்மட்	—	யுஸ்டிலேகோ சைட்டாமினி
II.	உருளையில் லேட் ப்ளைட்	—	ஆல்டர்னேரியா சொலனை
III.	புடலைகளில் பௌடரிமில்டியூ	—	எரிசையே சிக்கரோ சியாகம்

இவற்றுள் :

A) I மற்றும் II B) II மற்றும் III

C) II மட்டும் D) III மட்டும்.

Consider the following pairs :

I.	Whip smut of sugarcane	—	Ustinlago Beitaminea
II.	Late blight of potato	—	Alternaria solani
III.	Powdery mildew of cucurbits	—	Erisiphae cichovaceacum

Find the pair(s) which is / are not matching :

A) I and II B) II and III

C) II only D) III only.

93. **பட்டியல் I** ஐ **பட்டியல் II** உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

பட்டியல் I (நோய்க் கிருமிகள்)		**பட்டியல் II** (விருதோம்பிக்குள் செல்லும் வழி)
a)	*பிளாஸ்மோடியோபோரோ பிராசிகே*	1. காயங்களின் மூலம்
b)	*டாப்ரைனா டிபார்மன்ஸ்*	2. வேர்த்தூவிகள் மூலம்
c)	*பக்சீனியா கிராமினிஸ்*	3. மொட்டுகள் மூலம்
d)	*ப்யூசாரியம் சொலனை*	4. எபிடெர்மல் செல்கள் மூலம்.

குறியீடுகள் :

	a	***b***	***c***	***d***
A)	1	2	3	4
B)	2	3	1	4
C)	2	3	4	1
D)	1	3	4	2.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I (**Pathogens**)		**List II** (**Place of penetration into host**)
a)	*Plasmodiophora brassicae*	1.	Through wounds
b)	*Taphrina deformans*	2.	root hairs
c)	*Puccinia graminis*	3.	through buds
d)	*Fusarium solani*	4.	through epidermal cells.

Codes :

	a	***b***	***c***	***d***
A)	1	2	3	4
B)	2	3	1	4
C)	2	3	4	1
D)	1	3	4	2.

94. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : எலுமிச்சையில் வரும் கேன்கர் நோய் *சேந்தோமோனஸ் சிட்ரை* எனும் பாக்டீரியாவால் உண்டாகிறது.

காரணம் *(R)* : உருளையில் வரும் பழுப்பு அழுகல் ஒரு பாக்டீரியாவால் உண்டாகும் நோயாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

B) (A) சரி, ஆனால் (R) தவறு

C) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

D) (A) தவறு, ஆனால் (R) சரி.

Consider the following statements :

Assertion (A) : Citrus canker is caused by a bacterium called *Xanthomonas citri.*

Reason (R) : Brown rot of potato is also a bacterial disease.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are true and *(R)* is the correct explanation of *(A)*

B) *(A)* is true, but *(R)* is false

C) Both *(A)* and *(R)* are true, but *(R)* is not the correct explanation of *(A)*

D) *(A)* is false, but *(R)* is true.

95. பின்வரும் நோய்க்கிருமிகளில் ஒன்று, கம்புவில் பச்சைக் கதிர் நோய் மற்றும் டௌனி மில்டியுவையும் உன்டாக்குகின்றது.

A) பெரனோஸ்போரோ பிசி B) பிளாஸ்மோபோரா விட்டிகோலா

C) ஸ்க்ளிரோஸ்போரா கிராமினிகோலா D) எரிசைபே கிராமினிஸ்.

Green ear disease and Downy mildew of bajra are caused by which one of the following ?

A) *Peronospora pisi* B) *Plasmospora viticola*

C) *Sclerospora graminicola* D) *Erysiphe graminis.*

96. பின்வருவனவற்றுள் ஒன்று கடுகு, முள்ளங்கி, நூக்கல், முட்டைக்கோசு ஆகியவற்றைப் பொதுவாகத் தாக்கும் நோய் ஆகும்.

A) இலையில் வரும் ஆங்குலர் மொட்டு நோய்

B) முட்டைகோசில் க்ளப் ரூட் நோய்

C) க்ருசிபர்ஸ்-லில் வரும் வெள்ளைத்துரு நோய்

D) லூஸ் ஸ்மட் நோய்.

Which one of the following diseases is very common on mustard, radish, turnip and cabbage ?

A) Angular leaf spot disease
B) Club root of cabbage
C) White rust of crucifers
D) Loose smut disease.

97. சில நோய்கள் தாவரத்தின் ஒரு பாகத்திலோ அல்லது முழுத் தாவரத்திலோ அசாதாரணமான வளர்ச்சியை உண்டாக்குகின்றன. பாதிக்கப்பட்ட செல்களில் ஏற்படும் உயர்த்தப்பட்ட செல் பிரிவினால் உண்டாகும் அதிக எண்ணிக்கையிலான செல்களால் ஏற்படும் அசாதாரணமான வளர்ச்சி இவ்வாறு அழைக்கப்படுகிறது.

A) உயர்ந்த அழுத்தம்
B) ஹைபர்ட்ரோபி
C) ஹெபர்ப்ளாசியா
D) ஹெபர்சைட்டோசிஸ்.

Some diseases cause abnormal growth in a particular part or the whole plant. The abnormal growth due to increased cell divisions resulting in large number of component cells is known as

A) Hypertension
B) Hypertrophy
C) Hyperplasia
D) Hypercytosis.

98. *சிங்கைட்ரியம் எண்டோபயாடிரிக்கம்* ஏற்படுத்தும் உருளை வாட் நோய், எந்தப் பகுதிக்கு மட்டுமே உள்ள நோயாகும் ?

A) ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள அனந்தபூர் மாவட்டம்
B) தமிழ்நாட்டில் உள்ள நீலகிரி மாவட்டம்
C) மேற்கு வங்கத்தில் உள்ள டார்ஜிலிங் மாவட்டம்
D) கர்நாடகத்தில் உள்ள மங்களூர் மாவட்டம்.

Potato wart disease caused by *Synchytrium endobidricum* is an endemic disease in the

A) Ananthapur district of Andhra Pradesh

B) Nilgiri district of Tamil Nadu

C) Darjeeling district of West Bengal

D) Managlore district of Karnataka.

99. தேயிலையில் 'சிவப்புத் துரு' நோய் உண்டாக்குவது

A) *பக்சீனியா கிராமினிஸ்* B) *அல்புகோ காண்டிடா*

C) *கொலிட்டோடிரைகம் ஃபால்கேட்டம்* D) *செப்பலியுரஸ் வைரஸ்சன்ஸ்.*

Red rust of tea is caused by

A) *Puccinia graminis* B) *Albugo candida*

C) *Colletotrichum falcatum* D) *Cephaleuros virescens.*

100. தாவரங்களில் குள்ள வளர்ச்சி நிலையை ஏற்படுத்தும் ஹேலாசிடின் எனும் பொருளை உருவாக்கும் நுண்ணுயிர்

A) *பெனிசிலியம் டிஜிடேட்டம்* B) *பெனிசிலியம் பர்புயூரஸ்ஸன்ஸ்*

C) *பெனிசீலியம் க்ரைசோஜீனம்* D) *பெனிசிலியம் ஜவானிக்கம்.*

'Halacidin', a compound causing stunting in plants is produced by

A) *Penicillium digitatum* B) *Penicillium purpurescens*

C) *Penicillium chrysogenum* D) *Penicillium javanicum.*

101. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

	பட்டியல் I	பட்டியல் II
a)	நாட் ஜீன்கள்	1. Hup ஜீன்கள்
b)	ஹைட்ரோஜீனேஸ்	2. சைடேரோஃபொர்
c)	சூயூடோபாக்டின்	3. தையோபாசிலஸ்
d)	ஃபாஸ்ஃபேட்டை கரைக்கும் பாக்டீரியா	4. ரைசோபியம் மேலிடோடி.

குறியீடுகள் :

	a	*b*	*c*	*d*
A)	1	2	4	3
B)	4	1	2	3
C)	2	3	1	4
D)	3	4	2	1.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I		**List II**
a)	Nod genes	1.	Hup genes
b)	Hydrogenase	2.	Siderophore
c)	Pseudobactin	3.	Thiobacillus
d)	Phosphate solubilizing bacteria	4.	Rhizobium melitote

Codes :

	a	*b*	*c*	*d*
A)	1	2	4	3
B)	4	1	2	3
C)	2	3	1	4
D)	3	4	2	1.

102. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

	பட்டியல் I		பட்டியல் II
a)	பீசோஎலக்டிரிக்	1.	போலிமர் மாட்ரிக்ஸ்
b)	என்ட்டிராப்மேன்ட்	2.	காட்டலேஸ்
c)	கோலோய்டன் சவ்வு	3.	தாங்கி பிடிப்பது
d)	போரஸ் கண்ணாடி	4.	பையோசேன்சார்.

குறியீடுகள் :

	a	*b*	*c*	*d*
A)	4	1	2	3
B)	3	2	4	1
C)	2	3	1	4
D)	1	4	3	2.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I		**List II**
a)	Piezoelectric	1.	Polymer matrix
b)	Entrapment	2.	Catalase
c)	Colloidon membrane	3.	Support
d)	Porous glass	4.	Biosensor.

Codes :

	a	*b*	*c*	*d*
A)	4	1	2	3
B)	3	2	4	1
C)	2	3	1	4
D)	1	4	3	2.

103. கீழ்க்காணும் கூற்றுகளை கவனத்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

I. அளவு அடிப்படையில் ஒர் உயிரினத்தின் தனி டிஎன்ஏ துண்டுகள் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் சதர்ன் டிரான்ஸ்பர்.

II. சிறிய டிஎன்ஏ துண்டுகளை அவற்றின் அளவைப் பொருத்து துண்டுகளாகப் பிரிக்க, அகாரோஸ் ஜெல் மின்பிரிகை உபயோகப்படும்.

III. ஜெல்லை டிபுரினேஷன் இடையக, இயல்பு நீக்கம், இடையகயில் மூழ்கியிருந்து டிஎன்ஏ இரட்டையை டிநேச்சர் செய்து ஒற்றை போக்குகளாக்கும்

IV. வேதிமுறைச் செயற்பாடு செய்த அகாரோஸ் ஜெல்லை கதிரியக்க அடையாளமிட்ட ஆர்என்ஏ ஆய்வுக்கு மாற்றப்படுகிறது.

இவற்றுள்

A) I மற்றும் II சரியானவை ஆனால் III மற்றும் IV தவறானவை

B) I, II மற்றும் III சரியானவை ஆனால் IV தவறானது

C) I சரியானது ஆனால் II, III மற்றும் IV தவறானவை

D) IV சரியானது ஆனால் I, II மற்றும் III தவறானவை.

Consider the following statements and select the correct answer :

I. The technique used to separate DNA fragments of an organism based on size is Southern transfer.

II. Small DNA fragments are electrophoresed in agarose gel to separate the fragments depending on their size.

III. Gel immersed in depurination buffer, denaturation buffer which denatures the duplex DNA into single strands.

IV. Pre-treated agarose gel is transferred on to a radioactive labelled RNA probe.

Of these

A) I and II are correct, but III and IV are not correct

B) I, II, III are correct, but IV is not correct

C) I is correct, but II, III, IV are not correct

D) IV is correct, but I, II, III are not correct.

104. சரியான விடையைக் கண்டுபிடி :

I. டிஎன்ஏ விரல் அச்சிடு முறையில் இவை ஈடுபடுத்தப்படுகின்றன. தனிமைபடுத்துதல், கட்டுப்பாடு செரிமானம், எலக்ட்ரோஃபோரேஸிஸ், சதர்ன் பிளாடிங், டிஎன்ஏ ஆய்வுகளின் தேர்வு, வடிகட்டி இனக்கலப்பு, தன்னியக்க கதிர்ப்பு பதிவியல் மற்றும் டிஎன்ஏ அச்சு வடிவத்தின் பகுப்பாய்வு.

II. தனிநபர்களை வேறுபடுத்துவது அவர்களின் டிஎன்ஏ அச்சு முறைகளை வைத்தது. இது டிஎன்ஏ விவரக்குறிப்பு அல்லது மூலக்கூறு விரல் அச்சிடும் முறை என அழைக்கப்படும்.

இவற்றுள் :

A) I சரி மற்றும் II தவறு
B) I தவறு மற்றும் II சரி
C) அனைத்தும் சரி
D) அனைத்தும் தவறு.

Consider the following statements :

I. DNA fingerprinting involves isolation, restriction digestion, electrophoresis, southern blotting, selection of DNA probe, filter hybridization, auto radiography and analysis of DNA print pattern.

II. Distinguishing the individuals according to their DNA print patterns is called DNA profiling or molecular fingerprinting.

Of these

A) I is true and II is false
B) I is false and II is true
C) All are true
D) All are false.

105. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : பலபடியாக்கத் தொடர்வினை மரபணு மதிப்பு, மரபணு இணைதல் திறனாய்வுகள் கொண்ட ஒரு சிறந்த தொழில்நுட்பம். இது டிஎன்ஏ புத்தகச்சாலை அல்லது லைப்பேரிகளை ஸ்கிரினிங் அல்லது தெரிந்தாய்வு செய்ய உபயோகப்படும்.

காரணம் *(R)* : இந்த ஸ்கிரினிங் அல்லது தெரிந்தாய்வு முறைகள், க்ளோனிங் சரவரிசை அல்லது பொருட்களின் அமைப்பு, திறமையைப் பொருத்துள்ளது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

C) (A) தவறு, ஆனால் (R) சரி

D) (A) சரி, ஆனால் (R) தவறு.

Consider the following statements :

Assertion (A) : PCR is a good hybridization technique for screening DNA libraries.

Reason (R) : The screening techniques are mostly based on the sequence of the clone or the structure / function of the product.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are true and *(R)* is the correct explanation of *(A)*

B) Both *(A)* and *(R)* are true, but *(R)* is not the correct explanation of *(A)*

C) *(A)* is false, but *(R)* is true

D) *(A)* is true, but *(R)* is false.

106. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : டிஎன்ஏ இரட்டித்தல் மிகவும் சிக்கலான செயல்பாடு. இரட்டிப்பின்போது ஒரு பெற்றோர் இழை, ஒரு சேய் இழையில் பாதுகாக்கப்படுகிறது. இது செமி கன்சர்வேட்டிவ் இரட்டித்தல் எனப்படும்.

காரணம் *(R)* : டிஎன்ஏ டியுப்லேக்ஸ்சை சுற்றைப் பிரித்து, ஆர்என்ஏவின் பிரைமர் உருவாக்க, பாலிமரைசேஷன் செய்ய மற்றும் பிரைமரை எடுப்பது போன்றவை இதில் அடங்கும். டிஎன்ஏ பாலிமேரேஸ் I மற்றும் III, பிழையான காரத்தை நீக்கி சரியான காரத்தைச் சேர்கின்றன. இதை டிஎன்ஏ பழுது பார்ப்பது எனக் கூறுவர்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

C) (A) சரி, ஆனால் (R) தவறு

D) (A) தவறு, ஆனால் (R) சரி.

Consider the following statements :

Assertion (A) DNA replication is a highly complicated process. During replication, one of the parent strand is conserved in the daughter DNA. Hence it is semiconservative replication.

Reason (R) : It involves unwinding of DNA duplex, formation of RNA primer, polymerization and removal of primer. DNA polymerase I and III removes the incorrect base and add correct base. This is called DNA repair.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are true and *(R)* is not the correct explanation of *(A)*

B) Both *(A)* and *(R)* are true, but *(R)* is the correct explanation of *(A)*

C) *(A)* is true, but *(R)* is false

D) *(A)* is false, but *(R)* is true.

107. கீழ்க்காணுபவற்றுள், எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது ?

A) சீரமைக்கப்பட்ட மரபணு தொழில்நுட்பம் — ஸ்டூடிர்வேன்ட்

B) ஒப்பேரான் மாடல் — எட்யுரேட் பூக்னர்

C) பாதி பாதுகாத்துக் கொள்ளும் இயல்புடைய இரட்டிப்பு முறை — மேசேல்சன் மற்றும் ஸ்டால்

D) ஒரு மரபணு ஒரு நொதி கோட்பாடு — டாட்ம் பிடேல்.

Which one of the following is correctly matched ?

A) Recombinant DNA technology — Sturtevant

B) Operon Model — Edurad Buchner

C) Semiconservative replication — Messelson and Stahl

D) One-gene-one-enzyme hypothesis — Tatum Beadle.

108. ஒரு இழை டிஎன்ஏ இரட்டை ஹெலிக்ஸ்ஸை உருவாக்கும் ஆர்என்ஏ என்னவென்று அழைக்கப்படுகிறது ?

A) இழை குறியீடு B) குறியீடு இல்லாத இழை

C) பிரைமர் D) ஆய்வு / ஃப்ரோப்.

One strand of the DNA double helix forming RNA is called

A) Coding strand B) Non-coding strand

C) Primer D) Probe.

109. டிஎன்ஏயிலுள்ள ஒரு நியூக்ளியோட்டைடுயின் மாற்றத்தின் முடிவு, ஒரு புரதத்தில் ஒரு அமினோ அமிலம் மாற்றப்படுகிறது. அத்தகைய மாற்றங்கள் என்னவென்று அழைக்கப் படும் ?

A) மாறுதல் B) ட்ரான்ஸ்வேர்ஷன்

C) மிஸ்சேன்ஸ் சடுதி மாற்றம் D) நான்சேன்ஸ் சடுதி மாற்றம்.

Change in one nucleotide in DNA results in change in one amino acid in a protein. Such changes are called

A) Transition
B) Transversion
C) Mis-sense mutation
D) Non-sense mutations.

110. எலிசா (ELISA) எதற்கு பயன்படுத்தப்படுகிறது ?

A) வைரஸ் ஆர்என்ஏயைப் பிரிக்க
B) புரதம் சுத்திகரிக்கப்பட
C) டிஎன்ஏவை தனிமைப்படுத்த
D) குறிப்பிட்ட புரதத்தை அடையாளம் காட்ட.

ELISA is used to

A) separate viral RNA
B) purify protein
C) isolate DNA
D) identify specific protein.

111. பட்டியல் **I** ஐ பட்டியல் **II** உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

பட்டியல் I		பட்டியல் II
a)	ஈஸ்ட் சாரம்	1. நொதிகலன்
b)	புலப்படும் மார்க்கர்	2. ஆலிவ் எண்ணெய்
c)	அண்டிஃபோம்	3. அரை செயற்கை ஊடகம்
d)	பாஃபில்ஸ்	4. லூசிஃபெரேஸ்.

குறியீடுகள் :

	a	*b*	*c*	*d*
A)	3	4	2	1
B)	4	2	1	3
C)	2	1	3	4
D)	1	3	4	2.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I		**List II**
a)	Yeast extract	1.	Fermentor
b)	Visible marker	2.	Olive oil
c)	Antifoam	3.	Semi-synthetic medium
d)	Baffles	4.	Luciferase.

Codes :

	a	***b***	***c***	***d***
A)	3	4	2	1
B)	4	2	1	3
C)	2	1	3	4
D)	1	3	4	2.

112. பட்டியல் **I** ஐ பட்டியல் **II** உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

	பட்டியல் I		**பட்டியல் II**
a)	கே. இகேதா	1.	நகர்த்தமுடியாமல் செய்வது
b)	பொறியில் சிக்கவைக்கும் முறை	2.	கேஸோபால்
c)	திரவமான எரிபொருள்	3.	பால் விவில் முதனிலை புழு
d)	கோலோஸ்டிரால் ஆக்ஸிடேஸ்	4.	எம்.எஸ்.ஜி.
		5.	வாசனை உண்டாக்கி.

குறியீடுகள் :

	a	***b***	***c***	***d***
A)	1	2	3	5
B)	2	3	1	4
C)	4	1	2	3
D)	5	4	3	1.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I		**List II**
a)	K. Ideda	1.	Immobilization
b)	Entrapment	2.	Gasohol
c)	Liquid fuel	3.	Boll Weevil larva
d)	Cholestrol oxidase	4.	MSG
		5.	Flavouring.

Codes :

	a	***b***	***c***	***d***
A)	1	2	3	5
B)	2	3	1	4
C)	4	1	2	3
D)	5	4	3	1.

113. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : RFLP என்பது ஒரு அடையாள முறை. இவை DNA வின் தனிப்பட்ட வரிசையை பின்பற்ற உதவும் மற்றும் அதிக அளவு DNA தேவைப் படுகிறது.

காரணம் *(R)* : RFLP மிக முக்கியமான தகவல்கள் தருகிறது. ஆனால் இது ஒரு பலவகைப்பட்ட செயல்முறையாகும். மற்றும் அதிக நேரம் தேவைப்படும் செயல்முறை.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

C) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

D) (A) சரி, ஆனால் (R) தவறு.

Consider the following statements :

Assertion (A) : RFLP is a marker system used to follow a particular sequence of DNA and large quantity of DNA is required.

Reason (R) : RFLP provides valuable information but is a multistep procedure involving many procedures and is time consuming.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are true and *(R)* is not the correct explanation of *(A)*

B) Both *(A)* and *(R)* are true, but *(R)* is the correct explanation of *(A)*

C) Both *(A)* and *(R)* are false

D) *(A)* is true, but *(R)* is false.

114. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : உயிரிய தீங்குயிர் கொல்லிகள், இயற்கையாக காணப்படும் பொருட்களில் தீங்குயிர் பாதுகாப்பு குணமுண்டு.

காரணம் *(R)* : உயிரிய தீங்குயிர் கொல்லிகள், தீங்குயிர் நிர்வகித்தல் கருவியாகும். அவை நுண்ணுயிர்களும் நன்மை பயக்கக்கூடிய நூல் புழு அல்லது பாதுகாப்புள்ள உயிரிகள் சம்பந்தமாக செயல்திறன் கொண்ட பகுதிப் பொருள்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

B) (A) சரி, ஆனால் (R) தவறு

C) (A) மற்றும் (R) இரண்டும் சரி

D) (A) தவறு, ஆனால் (R) சரி.

Consider the following statements :

Assertion (A) : Biopesticides include naturally occurring substances that controls pests.

Reason (R) : Biopesticides are pest management tools based on micro-organism, beneficial nematodes or other safe biologically based active ingredients.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are false

B) *(A)* is true, but *(R)* is false

C) Both *(A)* and *(R)* are true

D) *(A)* is false, but *(R)* is true.

115. சேக்ரோபின் மரபணு கஸ்சேட்டை அரிசி மற்றும் புகையிலை தாவரங்களுக்கு, இடம் மாற்றம் செய்வதினால், கீழ்காண்பவற்றில் எதற்கு எதிர்ப்பு காட்டும் ?

A) *சுடோமோனாஸ் சிரிஞ்ஜே*

B) *எரிசைஃபே சீக்கோரேசியாறம்*

C) *ஃஸ்கிரோடினியா ஃஸ்கிளிலியோஷியோரம்*

D) *பான்டோயா ஸ்டீவர்சா.*

Cecropin gene cassette when transferred to rice and tobacco shows resistance to

A) *Pseudomonas syringae* B) *Krysiphe cichoracearum*

C) *Sclerotinia sclerotiorum* D) *Pantoea dispersa.*

116. மூலக்கூற்று அடையாளம் காட்டிகள் என்பவை

A) பயிர்களில் காணப்படும் புறசிவப்புக் குணங்கள்

B) முக்கியமான எண்ணை அளவின் பேதம்

C) எதிரியாக்கிகள் அல்லது அன்டிஜன்கள்

D) நுண்ணணுத் தொடர்பான உயிரியின் வழியலகுகள்.

Molecular markers are

A) Phenotypic traits in crop B) differences in essential oil content

C) antigens D) Parameters of molecular biology.

117. உயிரற்ற அழுத்தத்தை எதிர்கொள்ளும் முறை

A) பொருத்தமுள்ள கரைப்பொருள் B) ஆஸ்மோஃப்ரோடேக்டேன்ட்

C) க்யூடின் D) மெழுகு.

Resistance to abiotic stress is by

A) Compatible solutes B) Osmoprotectants

C) Cutin D) Wax.

118. அயல் ஜீனைப் பெற்ற தாவரங்களிலிருந்து செயல்திறன் கொண்ட முதல் மனித நொதி எது ?

A) சேரிடேஸ்
B) குளூக்கோசேராப்ரோஸிடேஸ்
C) கிளைகோஸில்சேராமைட்
D) CaMV $_{35}$S உயர்த்துபவை.

First active human enzyme produced in transgenic plants is

A) Ceredase
B) Glucocerabrosidase
C) Glycosylceramide
D) CaMV $_{35}$S promotor.

119. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : உயிர் உருமாற்றம் ஒரு உயிரிகள் சம்பந்தப்பட்ட செய்முறையாகும். இதில் அங்கக பொருட்களைத் திருத்தியமைத்து அதை உபயோகமுள்ள திரும்ப பெறத்தக்கப் பொருட்களாக செல்லிலுள்ள நொதிகள் மாற்றுகின்றன.

காரணம் *(R)* உயிர் உருமாற்றம் மாபெரும் ஸ்டீராயிட் தொழிற்சாலைகளில் பயன்படுகிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) தவறு, ஆனால் (R) சரி.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி
C) (A) மற்றும் (R) இரண்டும் தவறு
D) (A) சரி, ஆனால் (R) என்பது சரியான விளக்கமல்ல.

Consider the following statements :

Assertion (A) : Biotransformation is a biological process in which an organic compound is modified into some useful, recoverable products by enzymes contained in the cells.

Reason (R) : Biotransformation is utilised on a massive industrial scale in the steroid industry.

Now select your answer according to the coding scheme given below :

A) *(A)* is false, but *(R)* is true
B) Both *(A)* and *(R)* are true
C) Both *(A)* and *(R)* are false
D) *(A)* is true, but *(R)* is not the correct statement.

120. சரியான கூற்றைக் கண்டுபிடி

A) M.S. மீடியம், பூஞ்சை வளர்ப்புக்கு உபயோகப்படுகிறது

B) M.S. மீடியம், பாக்டிரியா வளர்ப்புக்கு உபயோகப்படுகிறது

C) M.S. மீடியம் தாவர திசுவளர்ப்புக்கு உபயோகப்படுகிறது

D) M.S. மீடியம், ஆல்கா வளர்ப்புக்கு உபயோகப்படுகிறது.

Select the correct statement :

A) M.S. medium is used in fungal culture

B) M.S. medium is used in bacterial culture

C) M.S. medium is used in plant tissue culture

D) M.S. medium is used in algal culture.

121. பட்டியல் **I** ஐ பட்டியல் **II** உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

பட்டியல் I		பட்டியல் II
a)	மிதவை தாவர நிலை	1. டைஃபா
b)	மூழ்கிய தாவர நிலை	2. பிஸ்டியா
c)	மிதக்கும் நிலை	3. செனிடெஸ்மஸ்
d)	கோரைப்புல் நிலை	4. வாலிஸ்னீரியா.

குறியீடுகள் :

	a	***b***	***c***	***d***
A)	3	2	4	1
B)	1	2	3	4
C)	3	4	2	1
D)	4	2	3	1.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I		**List II**
a)	Phytoplankton stage	1.	Typha
b)	Submerged stage	2.	Pistia
c)	Floating stage	3.	Scenedesmus
d)	Reed-swamp stage	4.	Vallisneria.

Codes :

	a	***b***	***c***	***d***
A)	3	2	4	1
B)	1	2	3	4
C)	3	4	2	1
D)	4	2	3	1.

122. கீழ்க்காணுபவற்றுள், எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது ?

A) சர்தார் சரோவர் திட்டம் — பாகீரதி ஆற்றின் மேல் கட்டப்பட்டது

B) நர்மதா நதிப் படுகைத் திட்டம் — உலகின் மிகப் பெரிய ஆற்றுப் படுகைத் திட்டம்

C) போத்காட் திட்டம் — குஜராத்தில் அதிகமாக செலவழிக்கப்பட்ட திட்டம்

D) தெரி அணை திட்டம் — அடர் காடுகள் உள்ள இடத்தில் கட்டப்பட்டது

Which one of the following is correctly matched ?

A) Sardar Sarovar Project — Built on Bhagirathi river

B) Narmada Valley Project — World's largest River Valley project

C) Bodhghat Project — Costliest project in Gujarat

D) Tehri Dam Project — Built on heavily forested area

123. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

	பட்டியல் I	பட்டியல் II
a)	காலம் மற்றும் அளவு கோட்பாடு	1. வெக்னர்
b)	கண்டங்களின் நகர்வு	2. வில்லிஸ்
c)	வாழ்க்கை அமைப்பு	3. விட்டாக்கர்
d)	சின்ஈகாலஜி	4. ரான்கியர்.

குறியீடுகள் :

	a	*b*	*c*	*d*
A)	2	1	4	3
B)	2	1	3	4
C)	4	1	2	3
D)	2	4	1	3.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I	List II
a)	Age and Area Hypothesis	1. Wegner
b)	Continental Drift	2. Willis
c)	Life forms	3. Whittakar
d)	Synecology	4. Raunkier.

Codes :

	a	*b*	*c*	*d*
A)	2	1	4	3
B)	2	1	3	4
C)	4	1	2	3
D)	2	4	1	3.

124. சரியான வாக்கியத்தைக் கண்டுபிடி

A) உயிரி-எடை என்பது ஒரு சூழ்நிலை அமைப்பு ஒன்றில் குறிப்பிட்ட நேரத்தில் காணப்படும் கரிமப் பொருள்களின் அளவு ஆகும்

B) பச்சை தாவரங்கள், அவற்றின் ஒளிச்சேர்க்கையின்போது சூரிய ஒளியை உற்பத்தி செய்கின்றன

C) முதன்மை நுகர்வோரால் தக்க வைக்கப்படும்பொழுது கரிமப் பொருட்கள், நிகர முதன்மை உற்பத்தி எனப்படும்.

D) நேராக நிற்கும் தாவரங்களுக்கு நிற்கும் பயிர் எனப்படும்.

Find out the correct statement :

A) Biomass is the total weight of organic matter present in the ecosystem at a particular time

B) Green plants produce solar energy during photosynthesis

C) Total amount of organic matter fixed by plants is net primary production

D) Standing crop is the number of plants standing erect.

125. தாவரங்கள் எந்த ஒரு உயிரற்ற அங்கத்தின் அடிப்படையில், குறு நாள் தாவரம் மற்றும் நெடு நாள் தாவரம் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன ?

A) வெப்பம் B) மழை

C) ஒளி D) நீர் உறுஞ்சுதல்.

On the basis of which abiotic factor, plants are classified into 2 groups : short-day plants and long-day plants ?

A) Temperature B) Rainfall

C) Light D) Water absorption.

126. இந்தியாவில் முதன்முதலில் உயிரின மண்டலம், இங்கு நிறுவப்பட்டது.

A) மைசூர் மலைகள் B) கூர்க் மலைகள்

C) கோடை மலைகள் D) நீலகிரி மலைகள்.

The biosphere reserve which was established first in India is located at

A) Mysore Hills B) Coorg Hills

C) Kodai hills D) Nilgiri hills.

127. இந்தியாவின் அணுமின் சக்தி முன்னேற்றத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார் ?

A) முனைவர் அப்துல் கலாம் B) முனைவர் சலீம் அலி

C) முனைவர் ஹோமி பாபா D) முனைவர் பாபா அம்தே.

Father of nuclear power development in India is

A) Dr. Abdul Kalam B) Dr. Salim Ali

C) Dr. Homi Bhabha D) Dr. Baba Amte.

128. ஒடம் என்பார் 1959 ல் இதைக் கூறினார்.

A) பொருள் சுழல்கின்றது, சக்தி பரவுகிறது

B) பொருள் உறிஞ்சுகிறது, சக்தி உற்பத்தியாகிறது

C) பொருள் ஊடுருவுகிறது, சக்தி ஒடுகிறது

D) பொருள் சிதைகிறது, சக்தி குறைகிறது.

Odum in 1959 coined which simple catch phrase ?

A) Matter circulates, energy dissipates

B) Matter assimilates, energy synthesised

C) Matter percolates, energy flows

D) Matter decomposes, energy decreases.

129. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : 4500 மீட்டர்களுக்கு அப்பால் முழுவதும் பனி படலம் உள்ளதால் அங்கு தாவர இனங்கள் காணப்படுவதில்லை.

காரணம் *(R)* : ஆல்பைன் தாவர இனங்கள் இதனால் 3600 முதல் 4500 மீட்டருக்குள் மட்டுமே காணப்படுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

C) (A) சரி, ஆனால் (R) தவறு

D) (A) தவறு, ஆனால் (R) சரி.

Consider the following statements :

Assertion (A) : Beyond 4500 m, there is snow and is known as the 'snow line', where vegetation is lacking.

Reason (R) : Alpine vegetation occurs between 3600 m to 4500 m.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are true and *(R)* is the correct explanation of *(A)*

B) Both *(A)* and *(R)* are true, but *(R)* is not the correct explanation of *(A)*

C) *(A)* is true, but *(R)* is false

D) *(A)* is false, but *(R)* is true.

130. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : பனி ஏரிகள் பனிப்பாறைகள் உருகுவதால் உண்டாகின்றன.

காரணம் *(R)* : பனி ஏரிகளுக்கு ஏற்ற எடுத்துக்காட்டுகள் புழல் ஏரியும் சிலிக்கா ஏரியும் ஆகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

B) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

C) (A) சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

D) (A) தவறு, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

Consider the following statements :

Assertion (A) : Glacial lakes are formed by the action of glaciers.

Reason (R) : Best examples of glacial lakes are the Puzhal lake and Chilka lake.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are true and *(R)* is the correct explanation of *(A)*

B) Both *(A)* and *(R)* are false

C) *(A)* is true, but *(R)* is not the correct explanation of *(A)*

D) *(A)* is false, but *(R)* is not the correct explanation of *(A)*.

131. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : இந்தியப் பெருங்கடல், அரபிக் கடல் மற்றும் வங்காள விரிகுடா இந்தியாவின் கடல் சார்ந்த உயிரின அமைப்பாக விளங்குகின்றன.

காரணம் *(R)* : கட்ச் மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் பவளப் பாறைகள் உலகில் மிகச் சிறந்தவைகளாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) சரி, ஆனால் (R) தவறு

B) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

C) (A) தவறு, ஆனால் (R) சரி.

D) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

Consider the following statements :

Assertion (A) : Indian Ocean, Arabian sea and Bay of Bengal constitute the marine ecosystem of India.

Reason (R) : Areas near Kutchchh and Andaman and Nicobar Islands are the most richest coral reefs reputed in the world.

Now select your answer according to the coding scheme given below :

A) *(A)* is true, but *(R)* is false

B) Both *(A)* and *(R)* are false

C) *(A)* is false, but *(R)* is true

D) *(A)* is true, *(R)* is true and *(R)* is the correct explanation of *(A)*.

132. விவசாய காடுகள் பற்றி எந்த கூற்று சரியானது ?

A) விவசாயிகளின் வருமானத்தைக் குறைக்கிறது

B) மண்ணின் வளத்தையும் உற்பத்தித் திறனையும் குறைக்கிறது

C) விவசாய நிலங்களின் அருகாமையில் மரங்களை நடுவது பயிர்களுக்குப் பாதுகாப்பற்றது

D) விவசாயிகளின் தனிப்பட்ட உபயோகத்திற்கு பல உபயோகமுள்ள பொருட்களை அளிக்கிறது.

Which of the following statements concerning Agro-forestry is true ?

A) It decreases the income of the farmer

B) It reduces fertility and productivity of soil

C) Planting trees near agricultural fields is not safe to crops

D) It provides useful products to the farmer for their personal use.

133. பசுங்குடில் விளைவு வாயுக்கள், எந்த அளவில் உள்ளன என்பதைப் பற்றி எந்த கூற்று சரியானது ?

A) CO_2 - 58% ; மீதேன் — 15% ; CFC — 18% ; N_2O மற்றும் NO — 5%

B) CO_2 - 57% ; மீதேன் — 17% ; CFC — 22% ; N_2O மற்றும் NO — 4%

C) CO_2 - 59% ; மீதேன் — 15% ; CFC — 19% ; N_2O மற்றும் NO — 6%

D) CO_2 - 59% ; மீதேன் — 16% ; CFC — 17% ; N_2O மற்றும் NO — 8%.

Which of the following concerning greenhouse gases composition is true ?

A) CO_2 - 58% ; Methane — 15% ; CFC — 18% ; N_2O and NO — 5%

B) CO_2 - 57% ; Methane — 17% ; CFC — 22% ; N_2O and NO — 4%

C) CO_2 - 59% ; Methane — 15% ; CFC — 19% ; N_2O and NO — 6%

D) CO_2 - 59% ; Methane — 16% ; CFC — 17% ; N_2O and NO — 8%.

134. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

	பட்டியல் I	பட்டியல் II
a)	மெத்ஹீமோகுளோபுனியா	1. மெர்குரி மாசுபாடு
b)	நாக்-நீ ஒருங்கிணைந்த பல நோய்கள்	2. காந்தீயம் மாசுபாடு
c)	மினாமேடா	3. நைட்டரேட் மாசுபாடு
d)	மைய நரம்பு மண்டலம்	4. ஃபுளூரைட் மாசுபாடு.

குறியீடுகள் :

	a	*b*	*c*	*d*
A)	1	2	3	4
B)	3	4	1	2
C)	2	3	4	1
D)	3	1	4	2.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I	**List II**
a)	Methaemoglobinaemia	1. Mercury pollution
b)	Knock-knee syndrome	2. Lead pollution
c)	Minamata	3. Nitrate pollution
d)	Central Nervous system affect	4. Fluoride pollution.

Codes :

	a	*b*	*c*	*d*
A)	1	2	3	4
B)	3	4	1	2
C)	2	3	4	1
D)	3	1	4	2.

135. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : அடர்த்தியான மற்றும் உயரமான மரங்கள், தூசு துகள்களை வடிகட்டுகின்றன.

காரணம் *(R)* : *ஃபைகஸ் ரிலிஜியோசா, மேன்ஜிஃபெரா இண்டிகா* மற்றும் *பாலியால்தியா லான்ஜிஃபோலியா* மரங்கள் மற்ற மரங்களைக் காட்டிலும் அதிக தூசி துகள்கள் உறிஞ்சும் தன்மை கொண்டவை.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) சரி, ஆனால் (R) தவறு

B) (A) தவறு, ஆனால் (R) சரி.

C) (A) மற்றும் (R) இரண்டும் சரி

D) (A) மற்றும் (R) இரண்டும் தவறு.

Consider the following statements :

Assertion (A) : Dense and tall trees filter out dust.

Reason (R) : *Ficus religiosa, Manifera indica* and *Polyalthia longifolia* trees were found to be better dust collectors than other trees.

Now select your answer according to the coding scheme given below :

A) *(A)* is true, but *(R)* is false

B) *(A)* is false, but *(R)* is true

C) Both *(A)* and *(R)* are true

D) Both *(A)* and *(R)* are false.

136. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : விவசாயப் பொருட்களை எரிப்பது, ஒரு முக்கியமான மாசுபாடு.

காரணம் *(R)* : இவற்றை எரிக்கும்போது, துகள்கள், CO_2 ஹைட்ரோ கார்பன்கள் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடுகளை வெளியேற்றுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

B) (A) சரி, ஆனால் (R) தவறு

C) (A) தவறு, ஆனால் (R) சரி.

D) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

Consider the following statements :

Assertion (A) : Agricultural Burning is an important pollution problem.

Reason (R) : Burning of plant residues give CO_2, particulate matter, hydrocarbons and nitrogen oxides.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are false

B) *(A)* is true, but *(R)* is false

C) *(A)* is false, but *(R)* is true

D) Both *(A)* and *(R)* are true and *(R)* is the correct explanation of *(A)*.

137. உயிரின அமைப்புகள், தட்பவெப்ப நிலை மாற்றத்தினால் ஏற்படும் அழுத்தம் காரணமாக இந்த நிலைக்குத் தள்ளப்பட்டு இதிலிருந்து மீளமுடியாத நிலை ஏற்பட்டு, பின்னர் மடிகின்றன. அது எந்த நிலை ?

A) வீழ்ச்சி நிலை B) தோய்வு நிலை

C) நுனி நிலை D) மாறும் நிலை.

Any extra stress caused by climatic factors in ecosystems leads to this point. This leads the system to an irreversible change involving a collapse. What is it ?

A) Collapsing point B) Dipping point

C) Tipping point D) Changing point.

138. வயல்களின் மண், அவற்றின் வரம்புகள் வரைதல் மற்றும் எல்லா வகையான ஆராய்ச்சிகளுக்கும் இந்த படிப்பு உதவுகிறது.

A) மண் காரணிகள் B) மண் அளவை

C) இடாஃபிக் படிப்பு D) மண் கண்காணித்தல்.

Which is the study related to mapping of soils in the fields where all soil researches are done with the help of this study ?

A) Soil factors B) Soil survey

C) Edaphic study D) Soil monitoring.

139. AQI என்றால் என்ன ?

A) ஏரோ குவாலிட்டி இன்டெக்ஸ்
B) ஏர் குவாலிட்டி இண்டிகேடர்
C) ஏர் குவான்டிட்டி இன்டெக்ஸ்
D) ஏர் குவாலிட்டி இன்டெக்ஸ்.

What is AQI ?

A) Aero Quality Index
B) Air Quality Indicator
C) Air Quantity Index
D) Air Quality Index.

140. காற்றில், இந்த உலோகங்கள் பொதுவாக உள்ளன.

A) மெர்குரி, காரீயம், வெள்ளி, கேட்மியம்
B) மெர்குரி, ஆர்சனிக், காரீயம், கேட்மியம்
C) மெர்குரி, காரீயம், துத்தநாகம், கேட்மியம்
D) மெர்குரி, துத்தநாகம், குரோமியம், கேட்மியம்.

Which are the common metals present in the air ?

A) Mercury, lead, silver, cadmium
B) Mercury, arsenic, lead, cadmium
C) Mercury, lead, zinc, cadmium
D) Mercury, zinc, chromium, cadmium.

141. இந்தத் திட்டம் ஒரு ஆதிவாசி சுய-உதவி திட்டம். இது இந்தியாவின் பாம்பு மற்றும் தேள் விஷம் உற்பத்தி செய்யும் இடம், மேலும் விஷமுறிவு சிகிச்சைக்கும் பேருதவி செய்கிறது.

A) கிங் நிலையம்
B) பாம்பு பூங்கா
C) முதலை வங்கி
D) வண்டலூர் சரணாலயம்.

Which is an adivasi self-help project and it supplies all of India's snake and scorpion venom needed for production of anti-venom for medical use.

A) King Institute
B) Snake Park
C) Crocodile Bank
D) Vandalur Zoo.

142. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : கரிமம் நிறைந்த கழிவுகளை இன்சினரேஷன் செய்வதாலும் அதனால் உண்டாகும் நச்சு வாயுக்களும் காற்று அசுத்தம் ஏற்படுகிறது.

காரணம் *(R)* : இன்சினரேசனுக்கு அனுப்பப்படும் கழிவுகள், PVC போன்ற பொருட்களைக் கொண்டிருப்பதால் அவைகள் எரிவதனால் பாலிவினைல் குளோரைட் டைபென்சோப்டையாக்சின் மற்றும் பாலிகுளோரினேட்டட் டைபென்சோ ம்யூரான்ஸ் போன்ற நச்சுத் தன்மை உள்ள வாயுக்கள் உண்டாகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

B) (A) சரி, ஆனால் (R) தவறு

C) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

D) (A) மற்றும் (R) இரண்டும் தவறு.

Consider the following statements :

Assertion (A) : The disadvantage of incineration of organic wastes is the liberation of toxic gases and thus the air pollution.

Reason (R) : Solid waste used for incineration contains materials like poly-vinyl chloride which on combustion lead to the formation of polychlorinated dibenzo-p-dioxins and polychlorinated dibenzofurans which are highly toxic.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are true and *(R)* is not the correct explanation of *(A)*

B) *(A)* is true, but *(R)* is false

C) Both *(A)* and *(R)* are true, but *(R)* is the correct explanation of *(A)*

D) Both *(A)* and *(R)* are not true.

143. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : பெருவாரியான கொள்ளளவைக் குறைப்பதாலும் குறைவான கழிவே மீதமாவதாலும் அதிக கரிமங்கள் கொண்ட திடக்கழிவுகளை இன்சினரேஷன் செய்வது ஒரு கவர்ச்சியான திட்டம் ஆகும்.

காரணம் *(R)* : இன்சினரேஷனுக்கு அனுப்பப்படும் கழிவுகள் PVC போன்ற பொருட்களைக் கொண்டிருப்பதால் அவைகள் எரிவதனால் பாலி குளோரினேட்டட் டைபென்சோப்டையாக்சின் மற்றும் பாலி குளோரினேட் டைபென்சோ ப்யூரன்ஸ் போன்ற நச்சு வாயுக்கள் உண்டாகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

B) (A) தவறு, ஆனால் (R) சரி.

C) (A) சரி, ஆனால் (R) தவறு

D) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

Consider the following statements :

Assertion (A) : The incineration of solid waste with high organic content is an attractive option for reasons like the considerable reduction in the volume of solid material and smaller residue.

Reason (R) : Solid wastes sent for incineration include poly vinyl chloride which on burning lead to the formation of polychlorinated dibenzo-p-dioxins and polychlorinated dibenzofurans which are highly toxic.

Now select your answer according to the coding scheme given below :

A) Both *(A)* and *(R)* are true and *(R)* is the correct explanation of *(A)*

B) *(A)* is not true, but *(R)* is true

C) *(A)* is true, but *(R)* is not true

D) Both *(A)* and *(R)* are true, but *(R)* is not the correct explanation of *(A)*.

144. கீழ்வரும் ஹைட்ரஜன் பற்றிய கூற்றுக்களை கவனத்தில் கொள்ளவும்.

I. ஹைட்ரஜன் வாயு நிலையில் உள்ள ஒரு மிகச் சாதாரணமானதும், மிகவும் லேசானதுமான எரிபொருள் ஆகும்.

II. அது கரி அற்றது. எனவே பசுமைக்கூட வாயுக்களும். உலக வெப்பமயமாதலும் உருவாகாது.

III. மிகவும் லேசானதால் சுலபமாக சேமிக்கவும், வேறு இடங்களுக்கு கொண்டு செல்லவும் இயலும்.

மேற்காணும் கூற்றுகளில் உண்மையற்றவை(களை)த் தேர்ந்தெடு :

A) I மற்றும் II B) II மற்றும் III

C) II மட்டும் D) III மட்டும்.

Consider the following statements about hydrogen fuel :

I. Hydrogen is the simplex lightest fuel in gaseous forms.

II. It is carbon free and there is no production of greenhouse gases and no global warming.

III. It is easy to store and transport being very light.

Which of the above statement(s) is / are not true ?

A) I and II B) II and III

C) II only D) III only.

145. தாவர செல்லில் பெரும் அங்கமாகத் திகழும் செல்லுலோஸ், வெவ்வேறு பணிகளைச் செய்யும் மூன்று அங்கங்களைக் கொண்ட செல்லுலேஸ் நொதியால் உடைக்கப்படுகிறது. கீழ்க்காணும் பணியைச் செய்யும் நொதியின் அங்கத்தின் பெயரைத் தேர்ந்தெடு.



A) β-(1 – 4) எண்டோகுளுகனேஸ் B) β-(1 – 4) எக்சோ குளுகனேஸ்

C) β-(1 – 4) குளுகோசிடேஸ் D) α-(1 – 4) குளுகோசிடேஸ்.

Cellulose. the major component of plant cell walls can be broken down by the enzyme cellulose. which has 3 components with different functions. One of the component catalyses the following reaction :



Select the name of the enzyme :

A) β-(1 – 4) endogluconase B) β-(1 – 4) exogluconase

C) β-(1 – 4) glucosidase D) α-(1 – 4) glucosidase.

146. தொழிற்சாலைகள், மின்நிலையங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியவை ஏற்படுத்தியதில் இந்திய காடுகளின் பரப்பளவு மிகவும் குறைந்ததால் சமூக காடுகள் திட்டம் உருவாக்கி செயல்படுத்தப்பட்டது. சமூகக் காடுகள் துவங்கியதின் முக்கிய நோக்கம்

A) உள்ளூர் மக்களின் அடுப்பெரிக்க உதவும் விறகு தேவையைச் சமாளிக்க

B) காகிதம் மற்றும் கூழ் தொழிற்சாலைகளின் மூலப்பொருட்களின் தேவையை ஈடு செய்ய

C) வீட்டு விறகுக்காகவும், மரத் தேவைக்காகவும் மக்கள் இயற்கைக் காடுகளை அழித்து விடாமல் இருப்பதற்காக

D) மேற்கண்ட இவை அனைத்துக்குமாக.

As the forest area in India fast dwindled due to industries. power projects. highway roads etc. the idea of social forestry was mooted and executed. The main aim of starting social forestry was

A) to meet the firewood requirement of local people

B) to the meet the raw material requirement of some industries such as paper and pulp

C) to avoid the destruction of natural forests for want of firewood and timber

D) all of these.

147. தமிழ்நாட்டில் உள்ள முப்பந்தல் எந்த உற்பத்திக்கு பெயர் பெற்றது ?

A) அணுசக்தி B) நீர்மின்சக்தி

C) சூரிய ஒளி மின்சக்தி D) காற்றாலை மின்சக்தி.

Muppandal in Tamil Nadu is known for the generation of

A) atomic power B) hydel power

C) solar power D) wind power.

148. அணுசக்தி உலையில், பயன்படுத்தப்படும் எரிதண்டு இதனால் ஆனது.

A) யுரேனியம் U 235 B) யுரேனியம் U 238

C) ப்ளுட்டோனியம் Pl 636 D) தோரியம் Th 876.

The fuel rods in a nuclear power reactor is made up of

A) uranium U 235 B) Uranium U 238

C) Plutonium Pl 636 D) Thorium Th 876.

149. கடலின் மேற்பரப்பின் சுடுநீருக்கும், கடலின் ஆழத்தில் உள்ள குளிர்ந்த நீருக்கும் உள்ள வெப்ப வேற்றுமையைப் பயன்படுத்தி, கடல் நீரில் வெப்பமாக சேமிக்கப்பட்டுள்ள சூரிய சக்தியை மின்சக்தியாக மாற்றும் செயல் இவ்விதம் அழைக்கப்படுகிறது.

A) கடல் வெப்பம் சமன்படுத்தும் வெப்பச் சலனம்

B) கடல் வெப்ப சக்தி மாற்றம்

C) கடல் வெப்ப நிலை பெருக்கும் காரணிகள்

D) கடல் அனல் செலவழிக்கும் வெப்பச் சலனம்.

The conversion of solar energy stored as heat in the ocean into electrical energy by making use of the temperature difference between the warm surface water and the colder deep water is known as

A) Ocean temperature equalising convections

B) Ocean thermal energy conversion

C) Ocean temperature expansion causes

D) Ocean thermal expending convections.

150. யுரேனியம் இயற்கையில் வெவ்வேறு வகைகளாக இருக்கின்றது. அவைகளுள் ஒன்று மட்டும் இயற்கையாகவே அணுக்கரு பிளப்புட் பொருளாக உள்ளது. அணுசக்தி உற்பத்தி செய்யத் தேவைப்படும் ஒரு பொருள் இது

A) யுரேனியம் 238 B) யுரேனியம் 235

C) யுரேனியம் 234 D) யுரேனியம் 233.

There are different types of Uranium occur in nature, of which only one is naturally occuring as fissionable material. The one that is required for the production of nuclear energy is

A) Uranium 238 B) Uranium 235

C) Uranium 234 D) Uranium 233.

151. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : நேரடி ஒளி தகர் வளர்வடக்க விதைகளில், புறச் சிவப்புக் கதிர்கள் விதை முளைத்தலைத் தடைப்படுத்தும்.

காரணம் *(R)* : சிவப்புக் கதிர்களை உறிஞ்சும் நிலையிலுள்ள பைட்டோகுரோம் நிறமிகள், விதை முளைத்தலை ஊக்குவிக்கும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) தவறு, ஆனால் (R) சரி B) (A) மற்றும் (R) இரண்டும் சரி

C) (A) மற்றும் (R) இரண்டும் தவறு D) (A) சரி, ஆனால் (R) தவறு.

Consider the following statements :

Assertion (A) : Far red light inhibits seed germination in positive photoblastic seeds.

Reason (R) : Red absorbing form of phytochrome pigment promotes seed germination.

Now select your answer according to the coding scheme given below :

A) *(A)* is false, but *(R)* is true B) Both *(A)* and *(R)* are true

C) Both *(A)* and *(R)* are false D) *(A)* is true, but *(R)* is false.

152. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : நேரடி ஒளி தகர் வளர்வடக்க விதைகளை, சிவப்பு ஒளியில் (660) வைத்து சிகிச்சை அளிப்பதன் மூலம் அதன் வளர்வடக்கம் நீங்கும்.

காரணம் *(R)* : புறசிவப்பு கதிர்களை உறிஞ்சும் செயலாக்க நிலையிலுள்ள பைட்டோகுரோம் நிறமிகள், விதை முளைத்தலைத் தூண்டக் கூடியவை.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) தவறு, ஆனால் (R) சரி
B) (A) மற்றும் (R) இரண்டும் தவறு
C) (A) மற்றும் (R) இரண்டும் சரி
D) (A) சரி, ஆனால் (R) தவறு

Consider the following statements :

Assertion (A) : The dormancy of positive photo-blastic seeds can be broken by exposing them to red light (660 nm).

Reason (R) : The far red absorbing form of the phytochrome pigment is stimulatory to seed germination.

Now select your answer according to the coding scheme given below :

A) *(A)* is false, but *(R)* is true
B) Both *(A)* and *(R)* are false
C) Both *(A)* and *(R)* are true
D) *(A)* is true, but *(R)* is false.

153. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : வளர்வடக்க நிலையிலுள்ள விதைகள், மைட்டோகாண்டிரியா அதிக செயலாக்கமுடையதாக உள்ளது.

காரணம் *(R)* : வளர்வடக்கத்திற்கு அதிக ஆற்றல் தேவைப்படும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) தவறு, ஆனால் (R) சரி
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி
C) (A) மற்றும் (R) இரண்டும் தவறு
D) (A) சரி, ஆனால் (R) தவறு

Consider the following statements :

Assertion (A) : In dormant seeds, mitochondria are more active.

Reason (R) : Dormancy requires high energy.

Now select your answer according to the coding scheme given below :

A) *(A)* is false, but *(R)* is true
B) Both *(A)* and *(R)* are true
C) Both *(A)* and *(R)* are false
D) *(A)* is false, but *(R)* is true.

154. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

பட்டியல் I		பட்டியல் II	
a)	அப்சிசிக் அமிலம்	1.	உணவுப்பொருள் இடமாற்றம்
b)	எதிலின்	2.	முளைத்தல் தடுப்பான்
c)	ஜிப்ரெலிக் அமிலம்	3.	டிரான்ஸ்கிரிப்ஷன்
d)	சைட்டோகைனின்	4.	முளைத்தலைத் தூண்டுதல்.

குறியீடுகள் :

	a	*b*	*c*	*d*
A)	3	4	2	1
B)	3	2	4	1
C)	2	4	1	3
D)	4	1	3	2.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

List I		**List II**	
a)	Abscisic acid	1.	Translocation of nutrients
b)	Ethylene	2.	Germination inhibition
c)	Gibberellic acid	3.	Transcription
d)	Cytokinin	4.	Induce germination.

Codes :

	a	*b*	*c*	*d*
A)	3	4	2	1
B)	3	2	4	1
C)	2	4	1	3
D)	4	1	3	2.

155. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்திக் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

	பட்டியல் I	பட்டியல் II
a)	ரைபோஸோம்கள்	1. தரச உற்பத்தி
b)	பசுங்கணிகங்கள்	2. கொழுப்பு பொருளை கார்போஹைட்ரேட்டாக மாற்றுதல்
c)	க்ளையாக்சிஸோம்கள்	3. கொழுப்பு உற்பத்தி
d)	ஸ்பீரோஸோம்கள்	4. புரத உற்பத்தி.

குறியீடுகள் :

	a	*b*	*c*	*d*
A)	3	4	1	2
B)	4	1	2	3
C)	2	1	4	3
D)	3	2	4	1.

Match **List I** correctly with **List II** and select your answer using the codes given below :

	List I		**List II**
a)	Ribosomes	1.	Synthesis of starch
b)	Chloroplasts	2.	Conversion of fat into carbohydrate
c)	glyoxysomes	3.	Synthesis of fat
d)	sphaerosomes	4.	Synthesis of protein.

Codes :

	a	*b*	*c*	*d*
A)	3	4	1	2
B)	4	1	2	3
C)	2	1	4	3
D)	3	2	4	1.

156. கீழ்க்காணுபவற்றுள், எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது ?

A) பைட்டின் — பாஸ்பரஸ்

B) ஜிப்ரெலிக் அமிலம் — ஐஸோசைம்

C) ஒலியிக் அமிலம் — ஹார்மோன்

D) அமினோ அமிலம் — க்ளைகோசிடிக் வேதியிணைப்பு.

Which one of the following is correctly matched ?

A) Phytin — Phosphorus

B) Gibberellic acid — Isozyme

C) Oleic acid — Hormone

D) Amino acid — Glycosidic linkages.

157. கீழ்க்காண்பனவற்றுள், எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது ?

A) சக்சினிக் அமிலம் — கிளைகோஜென்

B) இனுலின் — கிரெப் சுழற்சி

C) அமினோ அமிலங்கள் — நின்ஹைசடிரின் சோதனை

D) அமைலேஸ் — பைட்டின்.

Which one of the following is correctly matched ?

A) Succinic acid — Glycogen

B) Inulin — Krebs cycle

C) Amino acids — Ninhydrin test

D) Amylase — Phytin.

158. கீழ்க்காணுபவற்றுள், எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது ?

A) பெர்ல் மில்லட் — *சோர்கம் வல்கேர்*

B) பிங்கர் மில்லட் — *எலூசின் கொரகானா*

